







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

**தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி**

**மலர் 1 இதழ் 26 25.06.2025**



## கீழையூர் ஸ்ரீரங்கநாத பெருமாள் கோயில்
## மங்களாஸாஸனம்





# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முத்துக்கள்

## உபதேசங்கள்



# முத்துக்கள்

1. விபீஷணன் தமயனுக்கு அநுகூலமாயிருப்பதை விட்டுவிட்டு எப்படி அவன் சத்ருவிடம் போகலாம் என்றால், தமயனுக்கு அநுகூல மாயிருப்பது **ஸாமாந்யதர்மம்**. பகவானுக்குக் கைங்கர்யம் செய்வது **விசேஷதர்மம்**. இரண்டுக்கும் விரோதமிருந்தால் ஸாமாந்யதர்மத்தை விட்டு விடவேண்டியது. விபீஷணன் ராமனை ஸர்வேச்வரனான நாரா யணன் என்று அறிந்தவன். தமயனுக்கு அநுகூலனாயிருந்துகொண்டே ராமனுக்குக் கைங்கரியம் செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டவன். ஆகையாலேதான் ராவணனுக்குப் பலதடவைகளில் நல்ல புத்தியைச் சொன்னான். அவன் கேட்கவில்லை. இனிமேல் இங்கிருப்பதில் ப்ரயோஜனம் இல்லையென்று நினைத்து ராமனிடம் போனான். **தன் அநுஷ்டானத்தாலே பகவானுடைய கைங்கர்யமே உயர்ந்த தர்மம் என்றும் அதற்கு விரோதமான ஸாமாந்யதர்மத்தை விட்டுவிடவேண்டும் என்றும் உலகத்துக்குக் காட்டினான்.**

2. அகஸ்தியர் ராமனுக்கு ஆதித்யஹ்ருதயம் என்கிற மந்திரத்தை உபதேசித்து, இதை மூன்றுதடவை ஜபித்தால் சத்துருக்களை ஜயிக்கலாம் என்று சொன்னார். ராமன் அதை மூன்றுதடவை ஜபித்து ஸந்தோஷ முள்ளவனாய்ச் சண்டைக்குக் கிளம்பினான்.*
* ஸ்ரீமத் ராமாயணம் முழுவதும் நாராயணனைப் பரதேவதையாகச் சொல்லுகிறபடியால் ஸூரியனைப் பரதேவதையாகச் சொல்லுகிற **இந்த ஸர்க்கம் 107 பின்னால் சேர்க்கப்பட்டது என்று கோவிந்தராஜரின் அபிப்ராயம்**. (யுத்த கா)

3. ஒரு வீட்டிலிருந்து ஸு கத்தை அநுபவிப்பவன் எப்படி அந்த வீட்டைக்காட்டிலும் வேறோ, அப்படியே உடம்பிலிருந்து ஸுகத்தை அதுபவிப்பவனும் உடம்பைக்காட்டிலும் வேறு.

4. க்ஷேத்திரம் என்ற சொல்லுக்கு வயல் என்றும் பொருள் கொள்ளலாம். எப்படி வயலில் நெல் விளைகிறதோ, அப்படியே உடம்பு கர்மங்களின் பலன்களும், மேல்கர்மங்களுக்கு விதையான வாஸனைகளும் உண்டாகும் இடமான தால், அதைக்ஷேத்திரம் (வயல்) என்று சொல்லலாம்.

5. ஆத்மா அறிகிறது; உடம்பு அறியப்படுகிறது. ஆகையால் இவையிரண்டும் வேறு. ஒருவன் எதிரே நிற்கும் பொருளை அறியும் பொழுது, 'மனிதனான நான் இதைப்பார்க்கிறேன்." என்று எண்ணுகிறான். அப்பொழுது மனிதன் என்கிற உடம்புக்கும், நான் என்கிற ஆத்மாவுக்கும் வேற்றுமை தோன்றாது. ஆனாலும் மனிதன் என்கிற என் உடம்பை நான் பார்க்கிறேன் என்கிறபொழுது, உடம்பு வேறாகவும், ஆத்மா வேறாகவும் தோன்றுகிறது. அப்பொழுது தான் அந்த வேற்றுமை தோன்றும். ஆகையால் அவையிரண்டும் வேறுதான்.

6. ஒரு வெள்ளைத்துணியை சற்று நேரம் நம் உடம்பில் போட்டுக் கொண்டால், அந்த துணி கருத்துப்போகிறது. அதுபோல் ஆத்மா நெடு காளாக உடம்பிலிருந்தபோதிலும், அதற்கு உடம்பின் கருப்பு முதலான லைகள் வருவதில்லை.

7. ஒருவன் சாப்பிடும்போது, ஆஹாரத்தைப் பல்லு கடிக்கிறது; அதை நாக்கு உள்ளே தள்ளுகிறது. ஜீவன் அவைகளைஏவுகிறவன்; உடம்பு முதலானவைகள் கருவிகள்; அனுபவிக்கிறவன் ஜீவன்.

8. கர்மத்தினால் ஏற்படுகிற இந்தலோகத்தில் கர்மங்களைச்செய்யும் ஜனங்கள் தேவப்பிறப்பென்றும், அஸுரப்பிறப்பென்றும் இருவகை, நெடுநாளாய்வந்த புண்ணியங்களாலும், பாபங்களாலும் பிறக்கிற காலத்திலேயே பகவானுடைய உத்திரவை நடத்துவதற்காக வென்றும், அதை மீறுவதற்காகவே என்றும் இருவ கையாகவே ஜநங்கள் பிறந்திருக்கிறார்கள். அதாவது-பகவான் அவர்களை அப்படியே பிறப்பித்திருக்கிறார்.

9. சிரத்தையோடு ஒருகாரியத்தைச் செய்தால்தான், பலன்உண்டாகும். அந்தகாரியமும் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டதாக இருந்தால்தான். சிரத்தை என்பது ஸத்துவகுணம் உள்ளவர்களுக்குத்தான் என்பதில்லை.மற்றகுணங்களுள்ளவர்களுக்கும் உண்டு.

10. ஸாத்விக புத்தி உள்ளதை உள்ளபடி நினைக்கிறது. ராஜஸ பு த்தி சங்கை மஞ்சள் நிறமுள்ளதாக நினைக்கிறது. இதில் சங்கு என்பது ஸரி. மஞ்சள் நிறம் என்பது பிசகு. தாமஸபுத்தி மாமரத்தைப் புளிய மரமென்று நினைக்கிறது. இரண்டாவதிற்கு குணத்தில் மாறாட்டம். மூன்றாவதற்கு உருப்படியிலேயே மாறாட்டம்.

11. மனதின் வேலை தியானம்செய்து ஆத்மாவைப்பார்ப்பது. பிராணனின்வேலை ப்ராணாயாமம்செய்வது.

12. உயர்ந்த பக்தி- பரபக்தி. தகுந்தவர்களுக்குச் சொல்லுவதும் கர்மயோகத்தில் சேர்ந்தது. பக்தியோகத்திற்கு முளைபோன்ற பகவா னுடைய வேலைகளில் சேர்ந்தது என்று கருத்து.

13. பகவானுடைய கீதைக்கு உண்மையான அர்த்தத்தை மனதில் பட்டுச் சொல்லுகிறவனுக்கு தாழ்ந்த பலன்களில் ஆசையை பகவான் உண்டுபண்ணமாட்டார் என்று கருத்து. இவ்விடத்தில் கெட்டவர்களுக்குச்சொல்லாதே என்று முதலில் சொல்லி, பிறகு நல்லவர்களுக்குச் சொல்லு என்று பகவான் சொல்லி யிருக்கிறார். எதற்காகவென்றால்- நல்லவர்களுக்குச் சொல்லாமலிருந்தா லும் இருக்கலாம். கெட்டவர்களுக்குச் சொல்லக்கூடாதென்று தன் கருத்தைக் காட்டுவதற்காக.

14. பகவத் கீதையில், அர்ஜுநன் சொல்லுகிறான் -

நீர் என் விஷயத்தில் மிகவும் கவலைப்பட்டு, மிகவும் இன்பமாகச் சொல்லியபோது, நான் கொஞ்சம் ஸந்தோஷப்பட்டதையே வியாஜமாகக்கொண்டு, என்னிடத்தில் அளவில்லாத ஸந்தோஷத்தை அடைந்து,நல்ல ஸங்கதிகளைச் சொல்லிக் கொடுத்தபடியால், எனக்கு தப்பு எண்ணங்கள் எல்லாம் போய் விட்டன, அவைகளாவன - உடம்புதான் ஆத்மாஎன்கிற தப்பு எண்ணம்; உம்முடைய உடம்பான உலகத்தைப்பற்றி உம்முடைய உடம்பு என்று அறியாமையும் ; உடம்பு அன்று என்கிற எண்ணமும்;நித்தியம், நைமித்திகம் முதலான - சாஸ்திரத்தில் சொல்லிய-கர்மங்களைச்செய்வதனால் மிகவும் உயர்ந்த புருஷனான நீர் மிகவும் ஸந்தோஷமடைந்து, செய்கிறவர்களை உம்மிடம் அழைத்துக்கொள்ளுவீர் என்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்க, அந்தக்கர்மங்கள் ஸம்ஸாரத்தைக்கொடுக்கும் என்கிற தப்பு எண்ணம் - இவை முதலானவைகள், அதாவது- எந்தவஸ்து க்களைப்பற்றியும் அவைகளின் உண்மையே தான் தோன்றுகிறது.

ஆத்மா உடம்பைக் காட்டிலும் வேறு; அழிவது முதலான உடம் பின் கெட்டஸ்வபாவங்கள் ஒன்றுமில்லாதது; அறிவையே இயற் கையாக உடையது; எப்பொழுதும் உமக்கு இஷ்டமான வேலை களைச் செய்வதற்கே ஏற்பட்டது; எப்பொழுதும் உம்மால் ஏவத்தகுந்தது; நீர் எல்லா உலகங்களையும் விலையாட்டாக உண்டு பண்ணி, காப்பாற்றி, அழிக்கிறீர்; மோக்ஷத்தையும் கொடுக்கிறீர் ; ஒருவிதக்குற்றமும் உம்மிடத்தில் கிட்டாது; நீர் உயர்ந்த எல்லாநல்லகுணங்களும் இயற்கையாகவே உடையவர்; பரப்பிரும மமென்றும் பரமபுருஷனென்றும் சொல்லப்படுகிறவர்; இப்படித் தெரிந்து, இந்த அறிவை எப்பொதும் பழக்க வேண்டும்; உம்மு டைய ஸந்தோஷத்திற்காகவே நித்தியகர் மங்களையும், நைமித்திக கர்மங்களையும் செய்யவேண்டியது; கெட்டகாரியங்களைச் செய் யாமலிருக்கவேண்டியது; கண்முதலானவைகளையும், மனதையும் அடக்குவது, தயை, பொறுமை முதலான ஆத்மாவுக்கு இருக்க வேண்டிய நல்ல குணங்களை வளர்க்க வேண்டியது; இவை களைச்செய்தால், பக்தி என்று சொல்லப்படுகிற உம்முடைய தியானம் நாளுக்குநாள் வளர்ந்து நிறைவேறி, அதனால் உம்மை அடை யலாம்;உபநிஷத்துக்களில் மிகவும் உயர்ந்த புருஷனாகச் சொல்லப் படுகிறவர் எனக்குத்தோழனான வாஸுதேவன்என்கிற நீர்தான்- இவைகளை ஸந்தேக மில்லாமல் அறிந்தேன். பந்துக்களிடத்தில் ஸ்நேஹத்தினாலும், தயையினாலும் பலவிதமான தப்பு எண்ணங்கள் அளவில்லாமல் வளர்ந்து, அதனால் ஏற்பட்ட எல்லா துக்கங்களும் போய் விட்டன. இப்போது மிகவும் ஸந்தோஷமாக இருக்கிறது. சண்டைக்காக வில்லில் பாணங்களைப் பூட்டியாய் விட்டது.

15. ஆத்மாவை உள்ளபடி முதலில் அறியவேண்டும். கர்மங்களின் பலன்களில் ஆசையைவிட்டு, பகவானுடைய பிரீதிக்காகவே அவைகளைச் செய்யவேண்டும். நடுவில் வரும் பணம் முதலானவைகளையும், ஸுவர்க்கம் முதலானவைகளையும் விரும்பாமல், பகவானையே அடைவதுதான் பிரயோஜனமென்று எண்ண வேண்டியது. எந்த வேலை செய்தாலும், வண்டிக்காரனிடம் அகப்பட்ட வண்டிமாடுபோல், நாம் பகவானிடம் அகப்பட்டு அவனாலே வேலைகளைச் செய்விக்கப்படுகிறோம் என்றும், நினைக்கவேண்டியது. இப்படிச் செய்வது கர்மயோகம். இவைகளை வாயால் சொல்வதே கஷ்டம். நினைவு எப்படி வரும். செய்வது எங்கு இருக்கிறது.

16. இந்திரன் முதலான தேவதைகளிடம் பலன்களை வேண்டுவது, ஒருவன் ஒரு பணக்காரனிடம் போய் அவனைத்தாறுமாறாய்த்தோத்திரம் பண்ணி; அவனிடமிருந்து இரண்டணா பெற்று ஸந்தோஷப்படுவது போல் இருக்கிறது.

**17. வேதமே மூலப்ரமாணம்**

உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் சேதநம் அசேதநம் ஈசுவரன் என் னும் தத்துவங்களை அறிந்து, பக்தி ப்ரபத்தி ஆகிய ஹிதங்களுள் ஒன்றை அநுஷ்டித்து, மோக்ஷமாகிய புருஷார்த்தத்தைப் பெற முயலவேண்டும். இவையனைத்தும் வேதபாகங்களில் விளக்கிக்கூறப்பட்டுள்ளன. ஸம் ஸாரலோகத்திலுள்ளோர்க்கு வேதமே கைவிளக்காகும். வேதம் ஒன்றே அநாதியாய் அநந்தமாய் அபௌருஷேயமாய் ஸ்வதந்த்ரமான ப்ரமாணமாய்நிற்கும். மற்றைச் சாஸ்த்ரங்கள் அனைத்தும் வேதத்தை மூலமாகக் கொண்டு நின்றே ப்ரமாணமாகவேண்டும். வேதவேதாந் தங்களின் அர்த்தத்தை உலகிலுள்ள அனைவரும் அறிந்து உஜ்ஜீவிக்க வேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு ஆழ்வார்கள் அவற்றின் கருத்தை ஆய்ந்தெடுத்துத் தமிழில் நாலாயிர திவ்யப்பிரபந்தமாக வெளியிட்டருளினர்.

*****************************************************************************

